உ

ஸ்ரீ ராம ஜயம்



# ஸ்ரீ மன் நாராயணப் பெருமானின் ஆயிரம் திருநாமங்களை அடக்கிய திருப்பாடல்

ஆக்கியோன்;
பண்டிதர் ச.சுப்பிரமணியம் அவர்கள்
சிவன் கோயில், ஆவரங்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.

ஸ்ரீராம ஜெயம்

கோவிந்த நாம சங்கீர்த்தனம்

# ஸ்ரீமன் நாராயணப் பெருமானின் ஆயிரம் திருநாமங்களை அடக்கிய திருப்பாடல்

**ஆக்கியோன் பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்கள்**
**சிவன் கோயில் ஆவரங்கால்**

ஷ நூல் தெகிவளை ஸ்ரீ வெங்கடேஸ்வர மூர்த்தியின் திருவருள் துணையுடன்
ஷ தேவஸ்தான பிரதம சிவாச்சார்யர் பிரதிஷ்டா சிரோமணி
சுவானு பூதி கிரியாகிரமஜோதி அவர்களால்
வெளியிடப்பட்டது

ஓம் நமோ நாராயணாயநம ஓம்

பதிப்பு உரிமை உயர் திரு எஸ்.பி.சாமி அவர்கள்

இந்நூலை ஆக்கியவர் ஆவரங்கால் சிவன்கோயில் உரிமைவழிப் பரிபாலனசபைத் தலைவர் மகா கும்பாபிஷேக உறுதுணைச் செயலாளர் ஆகவும் கடமையாற்றிய காவிய இலக்கிய புராணீகர் சைவ மரபின் உயர் வழிச்சான்றோர் ஆகிய இவர்கள் இதற்கு முன் குமாரசம்பவம் என்னும் வடமொழிநூலினைத் தமிழ் ஆக்கம் செய்து வெளியிட்ட பெருமைக்கு உரியவர் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இங்ஙனம்
சாமி விஸ்வநாதக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமால் ஆயிரம் திருநாமம்

### விநாயகர் துதி காப்பு

வெண்ணிலா வண்ணன் சர்வ வியாபகன் நாற்பு யத்தன்
தண்ணிலா தழையும் சாந்தித் தந்தியின் வதனன் சார்ந்தார்
எண்ணிலாம் இடுக்கண் நீக்கி ஏமஞ்செய் எம்மான் மாமன்
கண்ணனாயிரமாம் நாமம் கனிவிக்கக் கருத்துள் வைப்பாம்.

**விஷ்ணு சகஸ்திர நாம பாராயணத்தின் முன்னுள்ள தியானம்**

திருமணி மணற்ற ளத்துத் திகழும்பாற் கடலின் முத்தச்
சரியணி தவிசார் பீடர், தவளத்தா ரணியர், மேற்சார்
தருமுகில் அமுதத் தூற்றில் தழைபவர் பதுமம் தண்டம்
உருளுறு திகிரி சங்கர், முகுந்தர்நம் உளத்துள் ளாக.

புவி அடி, விசும்பே நாபியாம், புணர்கால் பிராணனாம் இருசுடர் பூங்கண்,
செவிதிசை, சிரமும் சுவர்க்கம், வா யங்கி, திருவயி றுததியாய் அமைய
அவிர்தரும் விசுவ ரூபனாம் எவனுள் அமரரோ டாருயிர் அனைத்தும்
தவிர்கிலா தமர்ந்து தழையும்அத் தாமோ தரன்சரண் சரணெனத் தொழுவாம்

போற்றிஓம் பகவ வாசுதேவனே போற்றி போற்றி
சாந்தனை, அரவிற் சயனனை, நாபிக் கமலனைச் சுரர்பதி தன்னை,
ஆந்தனி முதலை, அகில ஆ தரனை, விசும்பனை, அமுதைக், கார் வணனைக்,
காந்தனை மலராள், கமலக்கண் ணவனை, யோகியர் கருத்தமர் வானை,
ஆந்தனை பணிவோம் விண்டுவைப், பிறவிப் பயமறுத் தருளும்ஆத் தனையே.

புயல்போல் வண்ணன் பூங்கண்ணன் பொலம்பூ வாடை புனையிடையான்
வியன்ஸ்ரீ வத்ச மறுமார்பன் மிலைகௌத் துவப்பூண் மிளிர்மெய்யன்
மயல்தீர் மனத்தர் சூழலுளான் மண்விண் வணங்கும் மலரடியான்
இயல்சேர் அரங்கன் இணையடி எம் முடியாய்ச் சிரமேல் இருத்துதுமே

சங்கசக் கரனே சாத்தும் கிரீடகுண் டலனே பொன்னூல்
அங்கவஸ்த் திரனே ஏரார் அம்புயத் தலர்கண் ணாள
சிங்கநற் றுளப ஆர கௌத்துவம் திகழும் மார்ப
துங்கநாற் புயத்த தூய மாதவ துதிசெய் வோமே.

பரவும் பாரி சாதநிழல் பயில்பொற் சிம்மா சனமீதே
மருவும் மேக வணன்நீண்டே மலர்கண் ணழகன் மதிவதனன்
பொருவில் நான்கு புயன்திருவாம் மறுவான் பாமா ருக்குமணி
இருவர் அணையும் அழகனெனும் எந்தை கண்ணன் சரணடைவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி ஆகி அனைத்திற்கும் பற்பல
சோதி யாம்வடி வாய்ச்சுடர் ஈசனாய்
மேதி னிப்பரம் மேற்கொளும் விண்டுவாம்
மாதி மைப்பரன் தாண்மலர் வாழ்த்துவோம்.

## ஆயிரம் நாமங்கள்

1. போற்றி ஓம் எல்லா மாவாய் போற்றி ஓம் நிறைந்தோய் யாவும்
போற்றி ஓம் வேள்வி ரூப போற்றிமுக் கால மாவோய்
போற்றி ஓம் அனைத்தும் தோற்றி போற்றி தோற்றுவித்த போற்றி
போற்றி ஆதார மாவோய் போற்றி ஓம் உயிர் தோறுள்ளாய் 8

2. போற்றி ஓம் வளர்ப்பாய் ஊட்டி போற்றிபற் றிகலில்லானே
போற்றி ஓம் வெளிஉள் உள்ளாய் போற்றி சீர் முத்தர்பேறே
போற்றி ஓம் மாற்ற மற்றோய் போற்றி ஓம் மெய்யுள் வாழ்வோய்
போற்றி ஓம் அனைத்தும் காண்போய் போற்றி ஓம் மெய்தெ ளிந்தோய் 16

3. போற்றி ஓம் அழிவில் லானே போற்றியோ கத்தால் சார்வோய்
போற்றியோ கிர்தம் நாத போற்றியுயிர் இயற்கைக் கீச
போற்றி நர சிங்கக் கோல போற்றி ஸ்ரீ மானே மாலே
போற்றி ஓம் கேச வேச ஆடவர் திலக போற்றி 24

4. போற்றியா வையுமாய் நிற்பாய் போற்றி ஈற்றொடுக்கி எல்லாம்
போற்றி ஓம் சிவனே தூயா போற்றி ஓம் நிலைநிற்போனே
போற்றி தோற் றரவின் மூல போற்றி ஓம் நித்த செல்வ
போற்றிகா ரணனாய்த் தோற்றி போற்றி ஓம் பலன் பாலிப்போய் 32

5. போற்றிஆ தாரத்தேந்தி போற்றி ஓம் உயர்பி றப்போய்
போற்றிபே ராற்றலாள போற்றி ஓம் அடக்கி ஆள்வோய்
போற்றி ஓம் தானே தோன்றி போற்றி ஓம் சம்புநாத
போற்றிஞா யிற்றி னுள்ளோய் போற்றிதா மரைப்பூங் கண்ண 40

6. போற்றி காம் பீர்ய நாத போற்றிஈ றாதி யில்லாய்
போற்றி பார் சுமக்கும் சேட போற்றி செயல், பயனும் செய்வோம்
போற்றி ஓம் அயன்மேல் மேலோய் போற்றி ஏதுகளுக்கெட்டாய்
போற்றி புலன் பொறியாள் வோனே போற்றி ஓம் பதும நாப 48

7. போற்றி ஓம் தேவதேவ போற்றி ஓம் அனைத்தும் ஆக்கி
போற்றி ஓம் அனைத்தும் எண்ணி போற்றி ஓம் ஊழியானே
போற்றி பே ருருவ மூர்த்தி போற்றி ஓம் நிலைத்த மூத்தோய்
போற்றி ஓம் கரணத் தெய்தாய் போற்றி ஓம் என்று முள்ளோய் 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. போற்றி ஓம் கருமை வண்ண போற்றி செங் கமலக் கண்ண
போற்றிஊ ழியில்ஒ ழிப்போய் போற்றி எண் குணமாம் செல்வ
போற்றிமூ வுலகும் வாழ்வோய் போற்றி ஓம் தூய்மை செய்வோய்
போற்றிமங் களமாம் வண்ண போற்றிஅனைத் தடங்க ஆள்வோய் 64

9. போற்றி செந் நெறியிற் சேர்ப்போய் போற்றிஓம் உயிர்க்குயிர்ப்பே
போற்றி ஓம் முதுமுன் னோனே போற்றி ஓம் எவைக்கும் மேலோய்
போற்றி ஓம் ஆன்ம நாத போற்றி ஓம் பொன்க ருப்ப
போற்றிமூ வுலக கர்ப்ப போற்றி ஓம் மாத வேச 72

10. போற்றி ஓம் மதுவை மாய்த்தோய் போற்றி ஓம் வரம்பி லாற்றல்
போற்றி ஓம் பகைதேய் ஊற்றம் போற்றி ஓம் வல்வில் லாள
போற்றி மே தாவி லாச போற்றி மூவடிமண் கொண்டோய்
போற்றி ஓம் நிறைந்தோய் எல்லாம் போற்றி மே லிலாத மேலோய் 80

11. போற்றிபகை பயங்காட் டொண்ணாய் போற்றி செய்ந் நலம்நி னைப்போய்
போற்றிநற் செயல்பே றாவோய் போற்றிஆ தாரம் வேண்டாய்
போற்றிதே வாதிதேவ போற்றிஓம் நலிந்தோர்க் காப்பாய்
போற்றிஓம் பரமா னந்த போற்றிஓம் அநாதி மூல 88

12. போற்றியுயிர்த் தோற்ற மூல போற்றி ஓம் பகல்போல் தோற்றி
போற்றிஆண் டுகளும் ஆவாய் போற்றி மாநாக ரூப
போற்றி எவ் வெவையும் கண்ணா போற்றி ஓம் அறிவே போற்றி
போற்றி ஓம் பிறப்பி றந்தோய் போற்றி எவ் வெவர்க்கும் ஈச 96

13. போற்றிதே டாமுன் மாடே போற்றிஓம் உயர்வாம் பேறே
போற்றி ஓம் அனைத்தின் ஆதி போற்றிஓம் வழாத வாய்ப்பே
போற்றி வா ரியாம்வ ராக போற்றிஓம் வடிவெண் ணில்லோய்
போற்றிஓம் தொடக்கொன் றில்லாய் போற்றிஓம் அகந்தோ றுள்ளாய் 104

14. போற்றிதூ மனத்து மாண்ப போற்றி ஓம் மெய்ம்மை மெய்யோய்
போற்றி எவ் வுயிர்க்கும் சார்பே போற்றி ஓம் அளவில் நில்லாய் (மிக்காய்)
போற்றி ஓம் என்றும் மாறாய் போற்றி ஓம் தவறாச் சார்பே
போற்றிதா மரையாம் கண்ணா போற்றி தர்மார்த்தம் செய்வோய் 112

15. போற்றி அறம் நாட்டத்தோற்றி போற்றி துயர்நிமித்தம் நீக்கி
போற்றி பல தலைவிராட்டே போற்றி ஓம் சகத்தைத்தாங்கி
போற்றிதா யகமாய்த் தந்தோய் போற்றி செய் புனித நாம
போற்றி ஓம் அமிர்த நாத போற்றி ஓம் நிலைநிற்போனே 120


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 போற்றிஏ றிய சீர்ச் செல்வ போற்றி மெய் தெளிந்த போத
போற்றிகலந் தெவையும் ஊக்கி போற்றி முற்றறிவாம் எல்லே
போற்றிதா னவரை நூறி போற்றி ஓம் ஜனார்த்த னாஓம்
போற்றிஓம் வேத வாய்மை போற்றி ஓம் வேத வித்தே 128

17 போற்றி ஓம் புலன்கட் கெட்டாய் போற்றிவே தாங்க மாவோய்
போற்றி ஓம் வேதம் ஆய்வோய் போற்றி ஓம் யாவும் காண்போய்
போற்றி கண் காணிக் கின்றோய்போற்றி ஓம் சுரர்கண் காணி
போற்றியிரு வினை மேற் பார்ப்போய் போற்றிகா ரியமே தாவோய் 136

18. போற்றி நால் மூர்த்தி யானோய் போற்றி நால் வியூகமுள்ளோய்
போற்றி நாற் றந்தங் கொண்டோய் போற்றி நாற்புயத்து நம்பி
போற்றி ஓம் ஒளியு ரூப போற்றி போக் கியங்களாவாய்
போற்றி போக் கியனுமாவாய் போற்றி தீதொழித்தடக்கி 144

19 போற்றி தோற்றுலகின் முன்னோய் போற்றிபற் றுறாத தூய
போற்றி ஓம் வெற்றி கொள்வோய் போற்றி ஓம் வெற்றி பூணி
போற்றி உல குதிக்கும் தான போற்றியுடம் படுத்த ஞான
போற்றி ஓம் உபேந்த்ர னானோய் போற்றிவா மனனாம் வள்ளல் 152

20 போற்றி உத்தமனாய் நீண்டோய் போற்றி வீண் படாத செவ்வோய்
போற்றி போற் றுநர்த்தூய் தாக்கி போற்றி ஓம் வலிமை சான்றோய்
போற்றி மீட் டாக்கி வைப்போய் போற்றி தோற் றீறில் நித்த
போற்றிவேந் தனுக்கும் வேந்த போற்றி சங் கரிக்க வல்லோய் 160

21 போற்றி ஓம் நியமமாக்கி போற்றி ஓம் நியமத்துய்ப்போய்
போற்றி ஓம் முத்தர் காண்போய் போற்றி கலை அனைத்தும் வல்லோய்
போற்றி ஓம் ஒளிரும் ரூப போற்றி ஓம் அரக்கர்க்கேறே
போற்றிவித் தைகளின் தேவே போற்றிதே மதுரத் தேனே 168

22 போற்றி புலன் புணராப் பூத போற்றி மிகு மாயா சால
போற்றி மிக ஊக்க சாலி போற்றி மா பலமார் தீர
போற்றிமா புத்தி மானே போற்றிவீ ரியத்தால் மிக்கோய்
போற்றிசா மர்த்திய சாலி போற்றிபே ரொளிப்பிழம்ப

23 போற்றி ஈ தெனாத கோல போற்றி ஓம் ஸ்ரீமத் தானோய்
போற்றிஅளப் பரிய ஞான போற்றிமா மலைகள் தாங்கி
போற்றி ஓம் வல்வில் ஏந்தி போற்றிபூ சுமக்கும் கூர்ம
போற்றி திரு வாழும் மார்ப போற்றிசா துக்கள் சார்பே 184

24 போற்றிதடை யுறாத சான்றோய் போற்றி சுரர்க்கினிய வார்த்தி
போற்றிகோ வண்ணம் காப்போய் போற்றி வேதியர் தம் வேந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிஒளி களுக்குட் சோதி போற்றி ஓம் தண்ட நாத
போற்றி தன் மயரச் சோட்டி போற்றி சிற கறிவா னந்த 192

25 போற்றிஉத் துங்க நாத போற்றி பொன் னழகு நாப
போற்றி நற் றவத்தின் சால்ப போற்றி ஓம் பதும நாப
போற்றி பிரஜைகளின் நாத போற்றி ஓம் இறுவாய் இல்லாய்
போற்றி ஓம் எல்லாம் நோக்கி போற்றிதீ யவர்த்தண் டிப்போய் 200

26 போற்றுப்பா கம் வீடுவோய் போற்றியுடன் சேர்ந்தூட்டுண்போய்
போற்றி ஓம் சலமில்லானே போற்றி புற மாயுள் ளுள்ளாய்
போற்றிஎதிர்த் தடக்க ஒண்ணாய் போற்றிஆ ணையினால் உய்ப்போய்
போற்றி மறை துதி செய் சீல போற்றி தெவ் வசுரர்க் காய்வோய் 208

27 போற்றி தலைக் குரவரானோய் போற்றி குரு சிரேட்டனானோய்
போற்றி கலம் கரைசேர் தீப போற்றி ஓம் சத்ய சீல
போற்றிஉண் மையனாம் ஆண்மை போற்றி ஓம் உறங்கும் யோக
போற்றி ஓம் இமையா நோக்க போற்றி வெல் புலன் தார் சூடி 216

28 போற்றிமுற் றறிவித் யேச போற்றி முத் தரைமே லேற்றி
போற்றிஉல கொழுங்கில் நாட்டி போற்றி ஓம் காந்தி மானே
போற்றிநய உபாயம் ஆவோய் போற்றி பொறி யுலகி யக்கி
போற்றிஎலாம் அசைப்பாய் காலாய் போற்றிசிர சனந்தத் தோனே 224

29 போற்றியனைத் துயிர்க்கான் மாவே போற்றிஎண் ணில கண் ணோனே
போற்றிஎங் கனுங்கால் நாட்டி போற்றிஉலகுழலுவிப்போய்
போற்றி ஓம் பற்றி லாதோய் போற்றிஅறி யாமை காணாய்
போற்றிமறித் திருளும் மாற்றி போற்றி பகற் பானு வாவோய் 232

30 போற்றிஅவிக் கங்கிவாயா போற்றி ஓம் அநில னாவோய்
போற்றிபூபாரந் தாங்கி போற்றி அருள் நலமே நல்கி
போற்றிசஞ் சலமில் சித்தி போற்றி ஓம் உலகை ஓம்பி
போற்றிஉல குட் கொள் ஊணோய் போற்றிபல பலவாம் ரூப 240

31 போற்றிநல் லோரைப் போற்றி போற்றிநல் லோராற் போற்றி
போற்றிநன் றாற்றும் நம்ப போற்றிஎலாம் மறைப்போய் ஊழி
போற்றிஉள உறைவாம் தான போற்றி வழி நடத்தும் நாத
போற்றிஓம் கணிக்கொ ணாதாய் போற்றிஓம் அறிதற் கெட்டாய் 248

32 போற்றி சிட் டரில்வி சிட்ட போற்றிஆ ணையரைக் காப்பாய்
போற்றிமா சிலாத மாண்ப போற்றிவேண் டுவவுள் ளோனே
போற்றிஎண் ணியவா றெய்தி போற்றிகா ரியஞ்சீ ராக்கி
போற்றிசா தனனே சித்தி போற்றிஎல் லொளியார் தர்ம 256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33 போற்றிபத் தருக்காம் மாரி போற்றிஓம் படிய ளந்தோய்
போற்றி ஓம் தருமத் தெய்தி போற்றி உயிர் ஒடுங்கும் உந்தி
போற்றி உயிர் ஊட்டி ஓம்பி போற்றி ஓம் உலகாய் ஓங்கி
போற்றிஓம் இணைவில் ஏக போற்றிகேள் விகள்சேர் வாரி 264

34 போற்றிஓம் சிறப்பார் தோள போற்றிஏந் துவதின் றேந்தி
போற்றிகேள் விச்சீர் வாக்கோய் போற்றிஈ சுரர்க்கும் ஈச
போற்றிநிதி அனைத்தும் ஈவோய் போற்றிநிதி அனைத்தாம் சூர
போற்றிஒன் றலவாம் ரூப போற்றிபல பெரிய ரூப. 272

35. போற்றி ஒளிக் கொளியாம் சோதி போற்றிஎலாம் ஒளிர்விப் போனே
போற்றி ஒளி ஆற்ற லுள்ளோய் போற்றிஒளி எங்கு மாவோய்
போற்றிவெயில் மழையும் ஈவோய் போற்றிசற் குணத்தின் சார்பே
போற்றிஓங் காரம் சுட்டி போற்றிமறை மனுவாம் ரூப 280

36 போற்றிநில வினிமை நல்கி போற்றிஒளி பகன்போ லுற்றாய்
போற்றிமதி கடலில் தோற்றி போற்றிஓம் சுயம்பிர காச
போற்றிஉயிர் மதிபோல் ஊட்டி போற்றிஓம் அமரர்க் கீச
போற்றிபிறப் பொழிம ருந்தே போற்றிசகம் கரைசேர் சால்ப 288

37 போற்றிஉறு திரஞா னத்தோய் போற்றிமுக் காலத் தீச
போற்றிவளி போல்தூய் தாக்கி போற்றிவளி அசைவிக் கின்றோய்
போற்றி அலம் எனாமல் ஈவோய் போற்றிஅடி யவர்பற் றோட்டி
போற்றிகா மனையும் ஈவோய் போற்றிகவர் அழகின் மிக்கோய் 296

38 போற்றிஎலாம் விரும்ப வுள்ளோய் போற்றிவேண் டியவா நல்கி
போற்றி ஓம் உயர்சி றப்போய் போற்றியுகம் முதல வாக்கி
போற்றிஓம் கால சக்ர போற்றிஎண் ணற்ற மாய
போற்றிஓம் அனைத்தும் உண்போய் போற்றி உணர்ந் துரைக்க நில்லாய் 304

39 போற்றியோ கியரே காண்போய் போற்றிபல் லசுரர்க் காய்ந்தோய்
போற்றி எண் ணிலபோர் வென்றோய் போற்றிஓம் சர்வா னந்த
போற்றிஓம் ஒப்பில் அப்பா போற்றிஞா னியர்க்காம் பற்றோய்
போற்றிமயிற் றோகை சூடி போற்றி உயிர் பிணிக்கும் மாயா 312

40 போற்றிவா ரத்தார் மாரி போற்றிதவர் குரோதம் கொல்லி
போற்றிசினத் தகுவர் கால போற்றியெங் கணுமே கையாய்
போற்றிபுவிச் சுமைதீர்ப் போனே போற்றிமா றுதல்கள் இல்லாய்
போற்றிபிர சித்தி பெற்றோய் போற்றி ஓம் சுவாசக் கோவை 320

41 போற்றிபலம் தந்து வாங்கி போற்றிஇந் திரற்குத் தம்பி
போற்றிஓம் சலதி ரூப போற்றிமலை உலகு தாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிவழா தூழை ஊட்டி போற்றிநின தருளுள் நிற்போய்
போற்றிகாற் றமுதாய் நல்கல் போற்றிஅற நெறிகள் காப்போய் 328

42 போற்றிசுமந் தகிலம் ஓம்பி போற்றி ஓம் வரத ராச
போற்றிவா யுவினை ஊர்வோய் போற்றிஓம் வாசு தேவ
போற்றிநிறை காந்தி மானே போற்றிஓம் ஆதி தேவ
போற்றிபரர் புரம்நீ றாக்கி போற்றிஓம் விடுத்த சோக 336

43. போற்றிபிறப் பாழி ஏந்தி போற்றிபவ பயம்நின் றேற்றி
போற்றிஓம் சூரர் சூர போற்றிஓம் சூரர் மைந்த
போற்றிஓம் பிறப்போர்க் கீச போற்றிஅநு கூல னாவோய்
போற்றிபிறப் அநேகம் ஏற்போய் போற்றிகரம் கமலம் ஏந்தி 344

44 போற்றிமரை மலர்போற் கண்ண போற்றிமலர் உலகாம் பத்ம
போற்றிஅர விந்தக் கண்ண போற்றிமன மலர்த்தி யான
போற்றிபல உருவாம் மாய போற்றிபெரு நிதியச் செல்வ
போற்றிஓம் வளர்ப வஞ்ச போற்றிஓம் அநாதி மூப்ப 352

45 போற்றிஓம் விசால நோக்க போற்றிகொடி கருட னாக்கி
போற்றிஓம் நிகர்வே றில்லாய் போற்றிஅகந் தொறுமமர் வோய்
போற்றிஅஞ் சுதற்க மைந்தோய் போற்றிசம யந்தேர் ஞானி
போற்றிஓம் அவிகொள் அத்த போற்றிஇலக் கியமாம் தேக 360

46 போற்றிவிடாத் திருவார் மார்வ போற்றிகளத் திசையே ஏந்தி
போற்றிஎலாம் எஞ்ச எஞ்சி போற்றிசெம் மீனாய்த் தோற்றி
போற்றிவீ டடைவார் நாடி போற்றிமுதல் நிமித்த மாவோய்
போற்றிநிறை அறிவில் நேர்வோய் போற்றியெலாம் பொறுக்கும் பூணி 368

47 போற்றிபொறை தவிர்பூ தாங்கி போற்றிவிழி விருந்தாம் வேளே
போற்றிமிகு வேகவானே போற்றிமீ தூண்மி சைந்தோய்
போற்றியுல குதிக்கும் வித்தே போற்றிசட சித்தி ணைத்தோய்
போற்றிபா வைக்கூத் தாட்டி போற்றிஎலாம் கருவாழ் உந்தி 376

48 போறிஆள் திறனில் வல்லோய் போற்றிசுகம் உருவாம் மூல
போற்றிஎலாம் இயக்கி ஏவி போற்றிதன் வசனாய் நிற்போய்
போற்றிஅற் புதப்ப டைப்போய் போற்றி அறிவரிய சத்தி
போற்றிஎலாம் மறைக்கும் மாய போற்றிமெய் அறிவாய் ஆன்றோய் 384

49 போற்றிவிதி விலக்கா தார போற்றிஎலாம் ஒடுங்கும் ஈட
போற்றிதகும் பதங்கள் ஈவோய் போற்றிஓம் தாணு வானோய்
போற்றி நிறை நிதிக்கி ழானே போற்றிஒளிர் வரம்பாம் காமர்
போற்றிஆ னந்த பூர்த்தி போற்றிஓம் நிறைவே யானோய் 392

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 போற்றிமங் களஞ்செய் நோக்கம் போற்றிஓம் மகிழ்வே நல்கி
போற்றி சேரிடமே எல்லாம் போற்றி உல கின்பம் வேண்டாய்
போற்றிசெலும் நெறியாய்ச் சேர்வோய் போற்றடியர் வழிசேர் செல்வ
போற்றியெலாம் நடத்தும் நாத போற்றிபிறர் நடத்தா நாத 400

51 போற்றிஓம் வீர தீர போற்றிவல் லவர்மேல் வல்லோய்
போற்றிஓம் தர்மா தார போற்றிசா துக்கள் சார்பே
போற்றிவை குந்த வாச போற்றிமுன் னிற்கும் மூல
போற்றிஓம் பிராண நாத போற்றிஓம் உயிர்ப்பை ஊட்டி 408

52. போற்றிஓம் பிரணவேச போற்றிபிர பஞ்ச ரூப
போற்றிஓம் இரண்ய கர்ப்ப போற்றியிரு பகையும் போக்கி
போற்றிஓம் இணைந்தாய் எல்லாம் போற்றிமணங் கமழ்வோய் எங்கும்
போற்றிவற் றாத ஊற்றே போற்றிஓம் பருவ கால 416

53 போற்றிநற் காட்சிக் கண்ண போற்றிஓம் கணிப்போய் எல்லாம்
போற்றியுள மலர்வாழ் மாண்ப போற்றிஎவை எவரும் ஏற்போய்
போற்றியுக் கிரமாம் ஆணை போற்றிஎலாம் வாழும் இல்லோய்
போற்றிவிரைந் தாக்கி நிற்பாய் போற்றி இளைப்பாற ஆற்றி 424

54 போற்றிஎலாம் ஆற்ற வல்லோய் போற்றிவிரி வாக்கி வைப்போய்
போற்றிசகம் நிலைக்க நிற்போய் போற்றிகா ரணமெய்ஞ் ஞான
போற்றிகா ரணனாம் நித்த போற்றி ஓம் பொருளாய்ப் போற்றி
போற்றிநிறைந் தெவையும் வேண்டாய் போற்றி ஓம் தொலைவில் செல்வ 432

55 போற்றிபே ரின்பப் பேறே போற்றிமிகு செல்வ நாத
போற்றிவெறுப் பொடுசேர் வில்லாய் போற்றிஓம் விசுவ மாவாய்
போற்றிஓம் பிறவா மூல போற்றி ஓம் அறஞ்சார் தாணு
போற்றிபெரு மகத்தின் பேறே போற்றிஉடு உருளுக் கச்சே 440

56 போற்றிஓம் உடுக்கள் நாத போற்றிஓம் பொறையே பூணி
போற்றிமுந் தூழி எஞ்சி போற்றிஐந் தொழிலும் ஆற்றி
போற்றிஓம் மகமாம் மாண்ப போற்றிஓம் மகம்போற் றீச
போற்றிமகத் துதியோர் மேலோய் போற்றிஓம் வேள்வி ரூப 448

57 போற்றிசத் திரயா கேச போற்றிவீ டுறுநர் சார்பே
போற்றியெலாம் இயல்பாய்க் காண்போய் போற்றிபற் றியல்பாய் இல்லோய்
போற்றிஓம் முற்று ணர்ந்தோய் போற்றி உத் தமமெய்ஞ் ஞான
போற்றிசரண் அருளும் சால்ப போற்றிஅழ கெழுமு கத்தோய் 456

58 போற்றிகா ரணமாம் சூக்க போற்றிநற் சுருதி ஓசை
போற்றிசா துக்கள் சாந்த போற்றிகைம் மாறில் ஈகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிஉளங் கவரா னந்த போற்றிஓம் கோபம் கொல்லி
போற்றிஓம் வீர பாகு போற்றிஓம் அதர்மர்க் கீறே 464

59 போற்றிஉயிர் மயக்கும் மாய போற்றிஓம் சுதந்தி ரத்தோய்
போற்றிஎலாம் நிறைந்தாய் நீங்காய் போற்றி உரு ஒன்றல் லாதாய்
போற்றிபல செயலும் ஆற்றி போற்றிஅகத் திருத்தி யாவும்
போற்றிஓம் தாயின் நேய போற்றிதாய் போற்கன் றோம்பி 472

60. போற்றிமணி வைப்பாம் வாரி போற்றிநதி பதியாம் ஈச
போற்றிஓம் அறங்காப் போனே போற்றிஓம் அறஞ்செய் வோனே
போற்றிஓம் தருமந் தாங்கி போற்றிஓம் சத்தாம் ஒன்றே
போற்றிஓம் அசத்தாய்க் காட்டி போற்றிஆன் மாவாய்க் காணி 480

61 போற்றிஅட் சரமாய் ஆள்வோய் அறிவேநீ அறியாய் போற்றி
போற்றிஆ யிரமேற் கண்ணா போற்றிமுழுப் பரஞ்சு மப்போய்
போற்றிலக் கணமாம் ஞான போற்றிசூ ரியனாம் கோள
போற்றிசத் துவத்தின் சார்பே போற்றிநர சிங்க ரூபா 488

62 போற்றிஓம் மகேச பூத போற்றிஓம் அநாதி தேவ
போற்றிஓம் மகாதே வேச போற்றிதே வேச தேவ
போற்றிதே சிகவேந் தற்கும் போற்றிபிறப் பாழி மீகான்
போற்றிகோ பால நாத போற்றிமுற் றுலகும் காப்போய் 496

63 போற்றிமெய் யுணர்வாய் மேவி போற்றிதொன் மையரில் தொல்வோய்
போற்றிஐம் பூதா தார போற்றிஅநு பவவா னந்த
போற்றிஓம் கவீந்த்ர சாம போற்றிஅவி தானம் ஈந்தோய்
போற்றிஓம் சோமபான போற்றி அருத் தமுத ருந்தி 504

64 போற்றிபயிர் வளர்க்கும் சோம போற்றிஎ வரையும் வெல்வோய்
போற்றிபலமாய வேட போற்றிபூ ரியர்த்தண் டிப்போய்
போற்றிவெற் றியினால் மிக்கோய் போற்றிஓம் வாய்மை போற்றி
போற்றிஓம் தான மூர்த்தி போற்றிசாத் விகருக் காத்த 512

65 போற்றிசீ வாத்ம ரூப போற்றிபணி வடக்கம் நோக்கி
போற்றிஓம் முகுந்த முத்த போற்றிபதம் அளவி றந்தோய்
போற்றிநீர் நிதியாம் வாரி போற்றிஅநந் தனுக்கான் மாவே
போற்றிமா கடலு றங்கி போற்றிபாழ் ஊழியாக்கி 520

66 போற்றிசித் தசனாம் ரூப போற்றிபூ சிக்க உள்ளாய்
போற்றிநிர் விகார நித்த போற்றிஅடாப் பகையை வென்றோய்
போற்றிகளி மகிழ்ச்சி நல்கி போற்றிஓம் ஆநந் தேச
போற்றிகளிப் படியார்க் கூட்டி போற்றிஓம் இட்ட பூர்த்தி 528



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67 போற்றிமெய்ஞ் ஞான தர்ம போற்றடிமூ வுலகுந் தாவி
போற்றி ருடி கபிலபோற்றி போற்றிமறப் பிலியே நன்றி
போற்றி மே தினிக்கு நாத போற்றிமுப் பதங்கொள் மூர்த்தி
போற்றிகடந் தவத்தை காண்போய் போற்றிபெரு வலிய கோட 536

68 போற்றிஓம் அந்த காந்த போற்றிபெரு வராக வேட
போற்றிகோ விந்த நாம போற்றிமந் திரமாச் சேனை
போற்றிவளைப் பொற்பூ ணானே போற்றிகுகை யுள்ளுள் ளானே
போற்றிகாம் பீர்ய வானே போற்றிமிக ஆழ மானோய் 544

69. போற்றிமொழி மனத்துக் கெட்டாய் போற்றிகதை திகிரி ஏந்தி
போற்றிமங் களங்கள் தோற்றி போற்றிகர ணாதி யாதி
போற்றிஓம் வெலப்ப டாதாய் போற்றிகிருட் டிணவியாச
போற்றிநிலை திறம்பா நித்த போற்றொடுக்கி உளதாய் உள்ளாய் 552

70 போற்றந்தி இரவி வண்ண போற்றிஅகத் தியவ சிட்ட
போற்றிவளர் தருவாய்த் தாங்கி போற்றிஉள மலரின் கண்ண
போற்றிபெரு மனத்து மாண்ப போற்றிகுணம் ஆறால் ஆன்றோய்
போற்றிறுதி எஞ்சி நிற்போய் போற்றிஓம் பரமா நந்த 560

71 போற்றிபுலன் வாகை பூண்டோய் போற்றிபுலம் உழும்அ லத்தோய்
போற்றிவா மனஆ தித்த போற்றி ஓம் பகல்செய் பானு
போற்றிபொறை வென்றி பூணி போற்றிசார்ந் தடையும் சால்ப
போற்றி பொறி உருவாம் சார்ங்க போற்றிமழு வலங்கை ஏந்தி 568

72 போற்றிகெடு பகைகெ டுப்போய் போற்றிவேண் டுவதந் தீவோய்
போற்றிவிசும் பளவிக் காட்டி போற்றிபொருள் விரிவி யாச
போற்றிபிற வாய்வா கீச போற்றிமுச் சாமம் போற்றி
போற்றிஓம் சாம கீத போற்றிஓம் சாம வேத 576

73 போற்றிதுன் பிலாப்பே ரின்ப போற்றிபிறப் பொழிம ருந்த
போற்றிஓம் வைத்ய நாத போற்றிஓம் துறவில் ஏற்றி
போற்றிஓம் அடங்க நாட்டி போற்றிபுலன் அலைவில் சாந்த
போற்றிஓம் நிட்டை கூட்டி போற்றிஅறி விலாமை இல்லாய் 584

74 போற்றிபிற வாப்பே றாவாய் போற்றிமுழு தழகா ரங்க
போற்றிஓம் சாந்தி நல்கி போற்றிஓம் அனைத்தும் ஆக்கி
போற்றிபுவிக் கருளா நந்த போற்றிஓம் புணரி சாய்வோய்
போற்றிபுவிக் கனுகூ லத்த போற்றிதலம் அனைத்தின் நாத 592

75 போற்றிஉல கனைத்தும் ஓம்பி போற்றிஅருள் பொழியும் கண்ண
போற்றிஅறச் செயலில் ஆர்வ போற்றிபோர் வெலாது மீளாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிபுலன் புகாம னத்தோய் போற்றிவிரி உலகுள் வாங்கி
போற்றிஏற் றவர்ச காய போற்றிநம சிவசி வாய 600

76 போற்றிதிரு மறுவார் மார்ப போற்றிதிரு வாழ்சீர் வீடோய்
போற்றிதிரு உகந்த நாத போற்றிதிரு அருளார் மேலோய்
போற்றிதிரு ஆழ்வார்க் கிவோய் போற்றிஸ்ரீ தேவி நாத
போற்றிஓம் ஸ்ரீநி வாச போற்றாற்றற் கருவூ லத்தோய் 608

77. போற்றிவினைப் பயன்தேர்ந் தூட்டி போற்றிஓம் ஸ்ரீத ரேச
போற்றிதிரு அருளும் செல்வ போற்றிஓம் பரமா னந்த
போற்றிநா யகனாம் செல்வ போற்றிஉல கெலாஞ்சேர் பீட
போற்றிஎழிற் கமலக் கண்ண போற்றிஎழில் விளையும் அங்க 616

78 போற்றிசதா னந்த ரூப போற்றிஆ னந்த னானோய்
போற்றிஒளி களுக்காம் தேச போற்றிபணி வுயர்ந்த சித்த
போற்றிஆ ளாகா தாகி போற்றிபுகழ் பொன்றாய் பொய்யாய்
போற்றிகனி எனக்காண்பேறே போற்றிகண் முன்னாம் மேலோய் 624

79 போற்றிமுற் றறிவாற் காண்போய் போற்றிமே லிலாத மேலோய்
போற்றிஓம் மாறா நித்த போற்றிதரை சயனித் தோனே
போற்றிபுவி போற்றத் தோற்றி போற்றிநிறைந் துறைவாம் பூதி
போற்றிஓம் கவற்சி இல்லாய் போற்றடியார் கவற்சி போக்கி 632

80 போற்றிசுடர் ளுக்காம் வித்தே தொழப்படுவார் தொழுவாய் போற்றி
போற்றியுருட் குடம தாவாய் போற்றிதிரி குணவ தீத
போற்றிநினை வார்தீ தோட்டி போற்றிஅநி ருத்த போற்றி
போற்றிஎதிர் நிகரொன் றில்லாய் போற்றிபிரத் யுமன போற்றி 640

81 போற்றிஅளப் பரிய மாண்ப காலநே மியின்கோள் போற்றி
போற்றிஓம் பகைகாய் வீர போற்றிசூ ரரின்கு லத்தோய்
போற்றிசுரேந் திரர்க்கும் ஈச போற்றிமூ வுலகுள் உள்ளாய்
போற்றிதிரி லோக நாத போற்றிசுடர்ச் சோதி யாதி 648

82 போற்றிகே சியினை மாய்த்தோய் போற்றிஓம் பசுமை வண்ண
போற்றிநாற் பொருளார்க் காத்த போற்றிஓம் விருப்புப் பூர்த்தி
போற்றிநிறை வாக்கி ஆசை போற்றிஓம் கவர்ச்சி ஆக்கி
போற்றிஆ கமங்கள் தந்தோய் போற்றிஈ தெனாப்பல் ரூப 656

83 போற்றிஓம் விஷ்ணு தேவ போற்றிபல செயல்பண் பாள
போற்றிஓம் அளவி றந்தோய் போற்றிதனஞ் ஜயனும் ஆவாய்
போற்றிநலம் செ(ய்)யநு கூல போற்றிதவ விரதம் ஆக்கி
போற்றிபடைப்(பு) அயனுள் ஊக்கி போற்றிஓம் பிரமம் நீயே 664

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84 போற்றிஓம் தவம்வ ளர்ப்போய் போற்றிஓம் தெளிந்தோய் வேதம்
போற்றிஅந் தணராய்த் தோற்றி போற்றிசொற் பிரமம் சுட்டி
போற்றிஓம் வேத போத போற்றிஅந் தணர்கள் ஆர்வ
போற்றிசோ பனசோ பான செயற்கருஞ் செயலோய் போற்றி 672

85 போற்றிமெய் ஒளிசெய் காந்தி போற்றிபே ரரவாம் ரூப
போற்றிஓம் அசுவமேத போற்றிமிகு வேள்வி வேட்போய்
போற்றிஓம் செபமா யாக போற்றிபே ரவிநீ ஆக்கி
போற்றிஎவர் துதிக்கும் ஏற்றோய் போற்றிதுதி எவையும் ஏற்போய் 680

86. போற்றிதுதி மொழியும் நீயே போற்றிதுதிச் செயலும் நீயே
போற்றிதுதிப் பவனும் நீயே போற்றி ஐம் படைப்போர் வீர
போற்றிபூ ரணனாய் உள்ளாய் போற்றடியர் விருப்ப மார்த்தி
போற்றிவினை நினையத் தீர்ப்போய் போற்றிவினை தீர்க்கும் கீர்த்தி 688

87 போற்றிஅகம் புறம்நோ யில்லாய் போற்றிமனோ வேக வேக
போற்றிதீர்த் தஞ்செய் தீர்த்த போற்றிவீ ரியமாங் காந்தி
போற்றியுறு பொருளை ஈவோய் போற்றிமீள் வொழிவீ டீவோய்
போற்றிவசு தேவர் மைந்த போற்றி எலாம் உறையில் லாவோய் 696

88 போற்றிஎலாம் உறையு ளாக்கி போற்றிஓம் அவிய தாகி
போற்றிசற் சனர்கள் சார்வோய் போற்றிசீரியவே செய்வோய்
போற்றிதிரி பில் மெய்ஞ் ஞான போற்றிசத் சித்தாம் தேச
போற்றிதத் துவர்க்கா தார போற்றிதிரர் சேனை நாத 704

89 போற்றியா தவகு லேச போற்றிநல் லறிஞர் சூழ்வோய்
போற்றியமு னையர்சூழ் வாழ்வே போற்றிஎலாம் அடங்க நோக்கி
போற்றிஉல கொளிக்கும் மாய போற்றிஉயிர்க் குறைவாம் தேவ
போற்றிஈ றிலபல் லாற்றல் போற்றிசெருக் கதர்மம் போக்கி 712

90 போற்றிஉயர் வறவர்க் காக்கி போற்றிஓம் திருப்தி யுள்ளோய்
போற்றிபெரு முயற்சிக்கெய்தி போற்றிவெல வொணாத தீர
போற்றிமுழு உலகாங்காய போற்றிபெரு விசுவரூப
போற்றிஒளிர் ஞான ரூப போற்றிவினை யாக்கை எய்தாய் 720

91 போற்றிஓம் அநந்தம் தோற்றம் போற்றிஇவ் வணனென் னாதாய்
போற்றிபல நூறாம் மூர்த்த போற்றிஓம் பலமு கத்தோய்
போற்றிஓம் ஒன்றாம் ஒன்றே போற்றிஒன் றலபல் பேத
போற்றிஓம் சோம வேள்வி போற்றி ஓம் சுகப்ர காச 728

92 போற்றிஓம் கஸ்மை போற்றி போற்றிஓம் யஸ்மை போற்றி
போற்றிஓம் தஸ்மை போற்றி போற்றிஓம் முத்தர் வீடே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிஉற வுலகுக் காவாய் போற்றிஓம் உலகாள் நாத
போற்றிமா தவனே போற்றி போற்றிஆழ் வார்தா யாவாய் 736

93 போற்றிஆ டகப்பொன் வண்ண போற்றிகிளிச் சிறைபோற் காய
போற்றிசிறந் துளவு றுப்ப போற்றிவிழை கடகத் தோள
போற்றிஒப் புயர்வொன் றில்லாய் போற்றிசத் துருவைச் சாய்ப்பாய்
போற்றி இணங் கிலியாய் நிற்போய் போற்றி வேண்டாச்சீர்ச் செல்வ 744

94. போற்றிஅசஞ் சலனாய் நிற்போய் போற்றிசஞ் சலனாய்ச் சார்வாய்
போற்றிசடத் துணர்வுண் டாக்காய் போற்றிஅபி மானம் ஆக்கி
போற்றிதொழத் தொழும்பும் ஏற்றி போற்றிஅனைத் துலகும் ஆளி
போற்றிஎலா உலகும் ஏந்தி போற்றிசுமங் கலமெய்ஞ் ஞான 752

95 போற்றிவேள் வியினாற் போற்றோய் போற்றடியார் பேறே பேறாய்
போற்றிவழா அறிவாய் வாழ்வோய் போற்றிதரை பொறுப்பாய் போற்றி
போற்றிஅருள் ஒளிபெய் காரே போற்றிஉறுப் புளமீக் காந்தி
போற்றிசர்வ படைகை தேர்ந்தோய் போற்றிஎலாம் ஏற்றுக்கொள்வோய் 760

96 போற்றிஎலாம் வசம தாக்கி போற்றி முதிர் முடிவில்பால
போற்றுறுதிப் பொருளாம் கோட போற்றிமந் திரமுன் தோன்றி
போற்றிநால் வகையாம் மூர்த்தி போற்றிநாற் கரத்த நம்பி
போற்றிநான் காம்வி யூக போற்றி நால் நால்வர் சேர்வே 768

97 போற்றிநாற் கரண மாவாய் போற்றுறுதிப் பொருட்கே தாவாய்
போற்றிநால் வேத பார போற்றிஉல கொருதாள் வைத்தோய்
போற்றிஉல குருள்உ ருட்டி போற்றியில்லாய் எங்கும் உள்ளாய்
போற்றிசயம் கொளப்ப டாதாய் போற்றிஓம் மீறா ஆணை 776

98 போற்றிபத் தியிலார்க் கெட்டாய் போற்றிஎளி தறிய எட்டாய்
போற்றிகுறுக் கீட்டால் கூடாய் போற்றிமுயற் சியினாம் கோளே
போற்றிதூர்த் தரினங் கொல்லி போற்றிநிறை இலக்க ணாங்க
போற்றிநுகர் உலகின் சார போற்றிபிர பஞ்ச மூல 784

99 போற்றிஉல குதய அத்த போற்றிஇந் திரன்போற் காப்போய்
போற்றி பெரும் பூதம் ஆக்கி போற்றிசெயல் பயனும் வேண்டாய்
போற்றிஆ ரணம்முன் னாக்கி போற்றிபிற வாதே தோன்றி
போற்றி ஓம் சுந்த ரேச போற்றிஓம் ஈரநெஞ்ச 792

100 போற்றிஅழ குதய உந்தி போற்றிஅணி கலமாங் கண்ண
போற்றிஅயன் முதலோர் போற்றாய் போற்றிஅன் னம்பா லிப்போய்
போற்றிகொம் புளமீ னானோய் போற்றிஜய ஜயவா தார
போற்றிதெரிந் துறுதெவ் தேய்ப்போய் போற்றிபொற் புறுபொன் னங்க 800


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101 போற்றிஓம் கலக்கொ ணாதாய் போற்றிவாக் கிறைவர்க் கீச
போற்றிவரம் பிலவா னந்த போற்றிமகா மாயைக் கீச
போற்றிநிறைந் தென்றும் உள்ளோய் போற்றிசரக் கறையாய் உள்ளோய்
போற்றிஉல குவப்ப செய்வோய் போற்றிமலர் அறப்பே றார்த்தி 808

102 போற்றிபுவி தானம் ஈந்தோய் போற்றிவெப் பொழிகார் நீர
போற்றிஉள்ளத் தூயர் ஆக்கி போற்றிஎ வுநர்வே றில்வாய்
போற்றிஅமு தாழ்வார்க் கூட்டி போற்றிஓம் அமிர்த காய
போற்றியெலாம் தெரிந்து தேர்வாய் போற்றிமுகம் எங்கு மாவாய் 816

103. போற்றிஎளி(து) எளியார்க் கெய்தி போற்றிமிகு விரதம் பூணி
போற்றிஎ திலாத ஏக போற்றிஓம் செறுநர்த் தேய்ப்போய்
போற்றிஓம் பகையை வாட்டி போற்றிஎலாம் தாழ ஓங்கி
போற்றிவிசும் பளாய்த்துய்ப் பூட்டி போற்றிஓம் அரசாம் தாரு 824

104 போற்றிசா ணூரற் சாடி போற்றிரவி இலக்கர் காந்தி
போற்றிஏழ் நாவோன் ஆவாய் போற்றிஏழ் சமித்தூண் யாக
போற்றிஏழ் பரியோன் ஆவாய் போற்றிஉரு வாக்கா ரூப
போற்றிபற் றுறாதாய் பாவம் போற்றி ஓம் நினைக்க ஒண்ணாய் 832

105 போற்றிஅச் சுறுத்தும் காந்தி போற்றிஅச் சறுக்கும் சாந்த
போற்றிஓம் அணுவில் நுண்மை போற்றிபெரி யதிற்பேர் ரூப
போற்றிகாற் றினிலும் நொய்ய போற்றிதூ லத்தும் ஆவோய்
போற்றிமுக் குணனும் ஆவாய் போற்றிஓர் குணமும் இல்லாய் 840

106 போற்றிமகத் தினும்ம கத்தே போற்றிஆ தாரம் வேண்டாய்
போற்றிதனைத் தானே தாங்கி போற்றிஅழ கவிர்மு கத்தோய்
போற்றிபரம் பரைக்குமூல போற்றிபரம் பரைபெ ருக்கி
போற்றிசுமை யடையாய்த் தாங்கி போற்றிமறை பரமாப் போற்றி 848

107 போற்றியோ கத்தில் கூடி போற்றியோ கீச போற்றி
போற்றிவேண் டுவன ஈவோய் போற்றிஇளைப் பாற்றும் சேக்கை
போற்றிமு டரைவ ருத்தி போற்றிறுவாய் ஈறு செய்வோய்
போற்றெழுவை திகமாந் தாரு போற்றிமருத் தினைஊர் வோனே 856

108 போற்றிஓம் தனுவல் லாள போற்றிவித் தகவில் விச்சை
போற்றிதண் டிக்கும் தண்ட போற்றடக்கி ஆளும் மாண்ப
போற்றிநின் ஆணை நிற்போய் போற்றிபகைக் கென்றும் தோலாய்
போற்றிஎலாம் சகாயம் ஆக்கி போற்றிஎலாம் நியமத் தாட்டி 864

109 போற்றிபிறர் நியமம் நில்லாய் போற்றிகா லனைவெல் கால
போற்றிசத் துவச்சீர்ச் சுத்த போற்றிசத் துவனாம் சாந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிசத் துவர்தம் சத்தே போற்றிசத் தியம்சார் தர்ம
போற்றிஓம் உயர்ந்தார் எண்ணி விழுமிய அர்ப் பணத்தாய் போற்றி 872

110 போற்றிபூ சிக்கத் தக்கோய் போற்றடியார் உவப்ப செய்வோய்
போற்றன்பர் அன்பாய் ஓங்கி போற்றிபர மாம்ப ரத்தோய்
போற்றிசுயஞ் சோதி நாத போற்றிஅழ கினிய சோதி
போற்றிநுகர்ந் தவிப்பே றார்த்தி போற்றிமா மகத்தாம் வாழ்வ 880

111. போற்றிசூ ரியனாந் தேவ போற்றிபல வர்ணத் தேச
போற்றிஎவ் வெவையும் ஆக்கி போற்றிமுற் றுலகுந் தோற்றி
போற்றிரவி தனைக்கண் ணாக்கி போற்றிஅளந் தறிய லாகாய்
போற்றிஓ மத்தாம் ஊணோய் இயற்கைஅனு பவத்தாய் போற்றி 888

112 போற்றி அடி யரைவீ டேற்றி போற்றிஅறந் தழையத் தோன்றி
போற்றிமுன் னெவைக்கும் முன்னோய் போற்றிகவல் சலிப்பி லாதாய்
போற்றிசா துக்கள் சார்பாய் போற்றிஅனைத் துலகா தார
போற்றிஓம் அற்பு தத்தோய் போற்றிஓம் அநாதி கால 896

113 போற்றிமுதி யர்க்கு மூத்தோய் போற்றிஓம் கபில வண்ண
போற்றிதின கரனும் ஆகி போற்றிஉல் கடங்கும் ஊழி
போற்றடியார் சுமங்க ளத்தாய் போற்றிசுமங் களங்கள் செய்வோய்
போற்றிசுமங் களவா னந்த போற்றிசுமங் களமுற் றூட்டி 904

114 போற்றிமங் களம்பா ரிப்பாய் போற்றிமுக் குற்ற மில்லாய்
போற்றிதிகழ் குண்ட லத்தோய் போற்றிஓம் மனமாம் சக்ர
போற்றிஎழில் நடையின் பீடோய் போற்றிமறை விதிநேர் ஆணை
போற்றிஓம் உரைக்கெட்டாதோய் போற்றிஒலி ஓசை ஆவாய் 912

115 போற்றிமுத் தாபம் தீர்ப்பாய் போற்றிஇர விருளாய்த் தோற்றி
போற்றிஓம் கொடுமை இல்லாய் அகம்புறம் அழக போற்றி
போற்றிசா மார்த்திய வானே சர்வசஞ் சார போற்றி
போற்றி பொறை யரிற் பொறுப்போய் அறிவரில் அறிவ போற்றி 920

116 போற்றிபவ பயமில் லோனே போற்றிபுகழ் புரிவார் நன்றே
போற்றிபிறப் பாழி ஏற்றி போற்றிஓம் மறத்தை மாற்றி
போற்றிஓம் நலமே நாட்டி போற்றிதீக் கனவு போக்கி
போற்றிவீ டுறவே தீர்வோய் போற்றிபுரந் தருள்வாய் எல்லாம் 928

117 போற்றடியர் நடுவுள் வைகி போற்றி உயிர் உயிர்வாழ் விப்போய்
போற்றி செறிந் தெங்கும் சேர்வோய் போற்றிஅப் போதாம் ரூப
போற்றிஓம் அநந்த சக்த போற்றிசினம் சேர்வில் செல்வ
போற்றிபயம் களைந்து தேற்றி போற்றிநடு நிலையில் நிற்போய் 936


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118 போற்றிஓம் ஆழங் காணாய் போற்றிமிகு பலன்கள் நல்கி
போற்றிஅவ் வவர்க்காம் ஆணை போற்றிவினை பயன்காண் வேத
போற்றிகா ரணனே நீயே போற்றிபுகல் எவைக்கு மாவாய்
போற்றுலகின் சோபை யானோய் போற்றிநல கதிகள் நல்கி 944

119 போற்றிஅங் கதம்பூண் சோபை போற்றிஉல குயிருண் டாக்கி
போற்றிஓம் உயிர்கட் காதி போற்றிபய பக்தி ஈவோய்
போற்றிபராக் கிரம சாலி போற்றிநிலை ஆதா ரத்தோய்
போற்றிநி ராதா ரத்தாய் போற்றிமலர் சிருட்டிப் பூவே 852

120. போற்றிஉல குறங்கா தோம்பி போற்றிஉயர் வறவு யர்ந்தோய்
போற்றிநல் லொழுக்க சீல போற்றிமீட் டுயிர்வாழ் விப்போய்
போற்றிஓங் கார அர்த்த போற்றிஈந் தேற்றுங் கொள்வோய்
போற்றிதான் மிளிரும் ஞான போற்றி உயிர்க் குறைவாந் தான 960

121 போற்றிபா லமுதி அன்னே போற்றிஉயிர் வாழ்வு நல்கி
போற்றிபிர பஞ்ச சார போற்றி நினை நீயே காண்பாய்
போற்றிஏ கான்ம ரூப போற்றிபிறந் திறந்து மூவாய்
போற்றுலகு பயன்கொள் தாரு போற்றிபிறப் பாழி நாவாய் 968

122 போற்றிஅனைத் தையுமுண் டாக்கி போற்றிஅய னையும்முன் தந்தாய்
போற்றிபயன் வேள்வி யாவாய் போற்றிவேள் வியினைக் காப்போய்
போற்றிஓம் மகஞ்செய் வோனே போற்றிமகம் உறுப்பாய்க் கொண்டோய்
போற்றிமகம் செய்விப் போனே போற்றிமகப் பூசை ஏற்போய் 976

123 போற்றிமுதல் மகத்தைத் தோற்றி போற்றிஓம் வேள்வி நாத
போற்றிமுதம் மகத்தாற் கொள்வோய் போற்றிமகத் தாற்றால் சேர்ப்போய்
போற்றிமகப் பயனைக் கூட்டி போற்றி ஓம் ஞான யாக
போற்றி உணும் அன்ன மாவாய் போற்றி உல(கு) அனமாய் உண்போய்984

124 போற்றிகரு உலகுக் காவாய் போற்றிதன் னிடந்தான் தோன்றி
போற்றிதரை அகழ்வ ராக போற்றிஇசை சாமவேத
போற்றிதே வகிக்குப்பால போற்றிசிட் டிப்போய் எல்லாம்
போற்றிஓம் பூமிக் கீச போற்றிதுரி சறுக்கும் தூய 992

125 போற்றிபாஞ் சஜன்யம் ஏந்தி போற்றிவாள் அங்கை தாங்கி
போற்றிசக் கரக ரத்த போற்றிஓம் சார்ங்க வில்லி
போற்றிகௌமோ தகமாந் தண்ட போற்றிவலம் திகரி கொள்வோய்
போற்றுறுதி தளராக் கோள போற்றிஎலாம் படையாம் ஆக்கம் 1000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உத்தரபாகம் பேராயிரம் உரை பேறாயின உரை

சீர்கொள்மீன் கூர்மம் பன்றி நரசிங்கம் குறளாய் மேலும்
ஏர்கொள்மூ இராமர் ஏந்தல் கண்ணன்பின் கற்கி பத்தாம்
கூர்கொள்மா தோற்றம் காட்டிக் குலவுல(கு) உயிர்க்குக் கோவாம்
நீர்கொள்பாம் பணையோன் நித்தன் நீடாழி சங்கம் ஏந்தி

பதுமனை அளித்த பத்ம நாபியன் பதுமை நாதன்
பதுமநன் னயனன் பாதன் பரந்தாமன் பதம்ப ணிந்தே
பதுமமும் துளவும் சாத்திப் பண்ணொடா யிரம்பேர் சாற்றி
விதிமுறை போற்றி வேண்ட வேண்டும் பே(று) எல்லாமாமே

நயந்துநாம் நவிலின் நாமம் நாரணன் நம்பால் நண்ணிப்,
பவந்தரும் பவம்பேய் தீராப் பழிபகை பிணிநோய் பாற்றும்,
நயந்தரும் நண்பு சுற்றம் நாடாள்நா யகமும் நல்கும்,
கயந்திரம் காத்தோன், பார்த்த சாரதி, கண்ணன் காணே.

தராததொன் றில்லைத் தாமோ தரன்தன்பால் ஆழ்வார்க் கென்னப்
புராதனர் பகவத் பாதர் புருடோத்த மன்சீர் போற்றல்
தராதலம் நம்பத் தந்தே தன்பதச் சர்பில் சேர்த்தும்,
அராதன தணையா வைகும் அற்புதன் அண்டர் கோவே.

சுருதி சொற்ற துளவன் துதியே
கருதி ஏத்துமின் கருமம் காப்பே.

மங்கள தோத்திரம்

தண்ணந் துளவு தண்டுதனு சங்கம் சக்ரம் நாந்தகங்கொள்
கண்ணன் கமலை வாழ்மார்வன் கமலக் கண்ணன் காயாம்பூ
வண்ணன் வாசு தேவன்மால் குறளாய் வளர்ந்தோன் வாழ்முதலாம்
அண்ணல் நாமம் மங்களமே அருளும் அரிக்கும் மங்களமே.

பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்,
ஜெய கோவிந்தம், ஜெய கோவிந்தம்

சுபம் அஸ்து நித்தியம் சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United Merchants Printers (Pvt) Ltd.,
71, Old Moor Street, Colombo - 12. T.P : 434281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org